# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ ஆனிமீ ௩௨ உ செவ்வாய்க்கிழமை (15 July 1952) [இல - உ௯]


# என்னிலும் - - - - இனியான்

## என்னுள்ளே நிற்கும் ஈசன்

இவ்வுலகம் சரம் அசரம் என்ற இரு பாகுபாடு உடையது. எல்லாப் பொருள்களும் அழிவுபடும். ஆன்மாக்கள் நித்தியம், சகலர் என்ற பிரிவுடைய உயிர்கள் ஆணவம், கன்ம, மாயை என்ற மும்மல மூகிழ்ப்புடையன. சிவனும் சீவனும் ஒன்று அன்று. எப்பொருளையும் கலந்து தாம் வேறாகி நிற்கும் அருட்பெருந் திருவுடையவர் சிவபரம்பொருளேயாம். இவ்வுண்மை யுணராதவரையில் நான் நான் என்று அலைவதே தொழிலாக முடியும். உடலோ தோல், எலும்பு, மாமிசம், இரத்தம், மேதஸ் போன்றவை கூடித் தடித்த ஒரு பொருள். இது விழுசுவர். இதற்கு உதவியான இந்திரியாதிகள் வாயுக்கள் வந்தவழி பார்த்துப் போய் விடும். அந்தராத்மாதான் துணை, ஆணவத்தால் சிறப்பிக்கப்பட்ட உயிர் அணு என்ற பேரடைத்துளது. உடலை இயக்கும் புறஅறிவில் ஆன்மாதான் முக்கியம். அதனையே நான் என்று கூறிக் காலங் கழிவு செய்கின்றோம். உண்மைப்பொருளை இதய கமலத்து வழிபடவே உபநிஷதங்கள் புகலுகின்றன.

எல்லாவற்றையும் சாமந்யமாக அறிபவரும், எல்லாவற்றையும் விசேடமாக அறிபவரும் எவரோ? இப்புவியிற் காணப்படும் மகிமையெல்லாம் எவருடையதோ? அந்தப் பரமாத்மா பிரமபுரமாகிய சிற்றம்பலத்தில் (இருதயாகாச மத்தியில்) எழுந்தருளி யுள்ளார் என்ற உயர் வழிபாடு வேண்டும்.

யஃ ஸர்வஜ்ஞஃ ஸர்வவித்
யஸ்யைஷ மஹிமா புவி|
திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ
வ்யோம்நி ஆத்மாப்
ரதிஷ்டிதஃ||

### யார் இனியவர்

சைவசமய உண்மையும் சைவ சித்தாந்த சாத்திர நம்பிக்கையும் காலந்தோறும் மாறுபடுகின்றன. சமய நிலையற்ற, சித்தாந்தந் நூலைக் கண்ணுலுங் காணாத விவேக சூடாமணிகள் பிரசங்கம் எப்படியிருக்கும்? சமயாசாரியப் பரமபக்த சிகாமணிகளின் சிவகரணம் பற்றிய திருவாக்கை ஒருவாக்காகத் தெளியுங்கள். அப்போது யார் இனியவர் என்று இனிது உணரலாம்.

திருச்சிற்றம்பலம்
என்னிலாரும் எனக்கினியாரில்லை

---

உடையாயுன் அடைக்கலமே!

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்

---

## இலங்கை வானொலித் தமிழ்க்கலைமன்ற முத்தமிழ்விழா

நிகழும் நந்தன வருடம் ஆடி மாதம் ௩ ௪, ௫-ஆம் நாட்களாகிய (18, 19, 20-7-52) வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில், வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மண்டபத்தில் அமைச்சர் உயர்திரு வ. நல்லையா அவர்கள் விழாவினைத் தொடக்கி வைப்பாரென அறியலாவேம்.

---

# தபாற் பகுதி மந்திரிப் பதவி

## திரு. நல்லையா விலகினர் திரு. நடேசன் ஏற்றார்

சுகவீனங் காரணமாகத் தபாற்பகுதி மந்திரி திரு. V நல்லையா அவர்கள் தமது மந்திரிப் பதவியினின்றும் நீங்கிவிட அப்பதவிக்குக் காங்கேயன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர். திரு. சு. நடேசன் அவர்கள் நியமனம் பெற்றுக் கடமையை ஏற்றுவிட்டார்.

13 வருட காலமாக அரசாங்கசபை அங்கத்தவராயிருந்து பாராளுமன்ற முதற்றேர்தலிற் றோல்வி அடைந்த திரு. நடேசன மறுபடியும் பாராளுமன்ற இரண்டாந் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

---

என்னிலும் இனியா
னொருவனுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப்
புறம்போந்து
என்னுளே நிற்கும்
இன்னம்பரீசனே.
திருச்சிற்றம்பலம்

எந்தப் பொருளும் தானே தோன்றும் என்பது சிலர் பிடிவாதம். அது தவறு, உலோகாயத மதம்பற்றிய ஒரு சிலர் படிப்பதுமட்டும் தேவாரம், இடிப்பது சிவாலயம் என்பதில் சந்தேகமில்லை. சிவசொத்துக் குலநாசம் என்பர். உயிருக்கு உறுதியான அறம் பொருள் இன்பம் வீடு என்பன எட்டுச்

---

### உடுவில் தமிழ்ப் புலவர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வரஐயர்

சுரைக்காயாகவிட்டு நடிப்பவர் சைவரா? சைவசமய விசேடத்தின் எவ்வுயிரும் பராபரன் றன சந்நிதியாக இருப்பச் சிவ கருணை குன்றிய, இரக்கமற்ற மக்களை எவ்வகுப்பில் சேர்ப்பது? சைவாச்சிரமங்கள் மாமிச ஆச்சிரமங்களாக மாறிவிட்டன. இது சிவநெறி வளர்ச்சியாகுமா? மங்களகராகிய மகாதேவரே இன்பருளுவார். இனிமையானவர் ... வொரு சைவரும் ...

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

## சென்னையில் ஐந்தாம் தமிழ் விழா

சென்னையின் தேனாம்பேட்டைத் தேசிய மகாநாட்டு மைதானத்தில் ஆவணி மாதம் 23-ந் திகதி காலை, ஐந்தாந் தமிழ் விழாவைச் சென்னைப் பிரதமர் திரு. ச. இராசகோபாலாச்சாரியார் திறந்து வைப்பார்கள் எனத் தெரியவருகிறது.

விழாவுக்குத் தலைமை வகிப்பவர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார்.

தமிழ்க்கலைக் காட்சியும் அவ்விடத்தில் நடைபெறும்.

---

# விநாயக விரத அருட் சிறப்பு

பண்டிதர் கா. நமசிவாயம் எழுதியது

விநாயகக் கடவுளுடைய விரதங்களிற் சதுர்த்தி விரதம் மிகச் சிறப்பை யுடையதும் விரைவில் நற்பயன்களைத் தருவதுமாகும். இந்திரன் சாபத்தை நீக்கியதும் பிரமா விஷ்ணுக்களுக்குப்படைப்பு, காப்பு, தொழில்களை அருளியதும் சதுர்த்தி விரதம் அநுட்டித்த பேறாகும்.

நளச்சக்கரவர்த்தி சித்திராங்கத மன்னன் என்போர் சதுர்த்தி விரதம் அனுட்டித்து கலிப்பகை தீர்த்து அரசாட்சி அடைந்தார்கள்.

ஆவணி மாதம்பூர்வ பக்கச் சதுர்த்தியில் விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும். அனுட்டிப்பவர்கள் அன்று அதிகாலையில் எழுந்து ஸ்நானஞ் செய்து சந்தியா வந்தனம் முடித்துக் கொள்ளவேண்டும். விநாயகக் கடவுளுக்கு விசேடமாக பூசை அபிஷேகம் முதலியன இயன்ற அளவுக்குச் செய்தல் வேண்டும். ஐம்புலன்களின் வழி மனஞ் செல்லாதவாறு உணவைக் குறைத்தல் வேண்டும். உபவாசம் இருத்தல் உத்தமம். அது செய்ய இயலாதவர்கள் ஒருவேளை உணவு கொள்ளலாம்.

அன்று சந்திரனைப் பார்த்தலாகாது. விரதம் பாரணை செய்யும்போது விருந்து, சுற்றம், அதிதிகள், பரதேசிகள் முதலானவர்களோடு போசனஞ் செய்யவேண்டும். இவ்வாறு வருடந்தோறும் அனுட்டிப்பது முறையாகும்.

சங்கட சதுர்த்தி விரதம் அனுட்டிக்கும் முறையில் பல வேறுபாடுகள் உள, சங்கடங்களை நீக்கிக்கொள்ள வேண்டினோர் இவ்விரதத்தை அனுட்டிக்கக் கடவர்,

மாசி மாதத்தில் அமரபட்சத்தில் செவ்வாய்க் கிழமை கூடிய சதுர்த்தியில் விரதம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்காரக (செவ்வாய்)சதுர்த்தி தோறும் சந்திரன் உதயமாகும்போது விநாயகரையுங் கும்பிட்டு சந்திரனையும் அருச்சிக்க வேண்டும். அறுகு கொண்டு விநாயகரை அருச்சிக்க வேண்டும். வன்னி மரத்தடியில் இருந்து தியானிப்பது உத்தமோத்தமமாகும்.

---

## தென் ஆபிரிக்க சத்தியாக்கிரகம்

தென் ஆபிரிக்க நிறத்துவேஷச்சட்டங்களை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்த 407 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

---

அரசியல் அலை

# சாராயவிற்பனை தரும்ஆதாயம்

## தாராளமில்லை என்ற சஞ்சலம்

### 'ஆர் குடி கெட்டாலும் ............'

வாழ்க்கை நடத்தத்தான் வேண்டும். ஆனால் களவெடுத்துப் பொய்சொல்லி அல்லது கண்ணியமற்ற வகையிற் சீவியஞ் செய்யப்படாதென்று மனிதர்கள் ஒருவருக் கொருவர் நற்போதனை செய்துகொள்வார்கள்.

அரசாங்கமும் அப்படியே நடைபெறவேண்டும். பண நெருக்கடியில்லாது நடைபெறவேண்டும். ஆனால் நயமாகவே நடைபெறவேண்டும்! ..............

முன்னர் அடிமை நாடு. எப்படி அரசாங்கம் நடைபெறுவதென்று பொது சனம் விதி விதிக்க முடியாது. இப்பொழுது இலங்காதிபம் சுதந்திரநாடு. பொதுசனம் எதையும் விதிக்கலாம்.

ஆசிய நாடுகளுக்கும் அந்நியநாடுகளுக்கும் கொள்கையளவில் ஒருபெரும் வேறுபாடு. இங்கே தெய்வமணஞ் சிறிது கமழும். ஆனால் அங்கே உலோகாயதம் ஓங்கி நிற்கும். இங்கே அரசாங்கம் சமய நெறிக்குச் சிறிது பயப்படும். அங்கே உலகநெறிக்கே உரிமை வழங்கப்படும்.

இத்தகைய ஆசியநாடுகளில் ஒன்றுபட இலங்கை காட்டிற்

சாராயம் விற்றுத் தாராளமாக வரும்படி அரசாங்கந் தேடுவதென்றால் ஆசியமரபுக் கிழுக்கன்றோ?

அரசாங்கம் சாராய உற்பத்தியிலும் உபயோகத்திலும் ஊக்கங் காட்டுவதைப் பார்க்கும்பொழுது மேலைத்தேச நாகரிகத்தினாலே இலங்கை மிகமோசமாகக் கீழ்நிலை அடைந்துவிட்டதென்றே சொல்லவேண்டும்.

எவ் வகையிலும் செல்வந் தேட வேண்டுமென்றால் அரசாங்கம் குதிரைப் பந்தயத்தையும் எடுத்து நடத்தலாமே. கோடிபொன் ஆதாயம் பெறலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தனஞு ஆனிமூ
௩௨ உ செவ்வாய்க்கிழமை

## வித்துவான்கள் வேண்டப்படாதவர்களா?

கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு என்ற முதுமொழி யிருந்தும் எங்கள் நாட்டில் எங்கள் மொழிகள் அரச வரிசை பெற்றிருந்தும் வித்துவான்களுக்கு விமோசனமில்லையா? வள்ளுவன் என்றால் வாயாரப் புகழுகிறார்கள், கம்பன் என்றாற் காது குளிரப் பேசுகின்றார்கள்; இளங்கோ என்றால் இதயந் துடிக்க எடுத்து இயம்புகின்றார்கள். யார்? தாய்மொழி அபிமானிகள். ஆனாற் குறள், இராமாயணம், சிலப்பதிகாரம் என்ற நூல்களைக் கற்றுத் தேறிப் பாண்டித்தியப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தில் அவமதிப்பேயன்றி வேறொன்றுமில்லையே. இந்த விபரீத நிலைமை, மானங்குலைக்கும் முறைமைக் கண்டிப்பாரில்லை! எடுத்துரைப்பாரில்லை!

வித்துவான்கள் பண்டிதர்களுக்கு வேண்டிய மதிப்பில்லையே என்று சில ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர்கள் வித்துவான்களாக வரக்கூடிய ஓர் ஊக்கத்தை அளிப்பதற்குப் பண்டித பாலபண்டிதப் பட்டம் பெறும் ஆசிரியர்களுக்குப் பிரத்தியேக வேதன நன்கொடை உதவிவந்தார்கள் அரசினர். ஆனாற் பண்டிதர்கள் வேதனநிலை வேதனையைக் கொடுக்கும் அந்தக் கீழ்நிலையிலேயே இருந்து வருகிறது. ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களாயிருக்கும் பண்டிதர்களுக்கும் வித்துவான்களுக்கும் இந்த விதியா? இதற்கு ஒரு முறையில்லையா? இதை ஆராய்பவர்கள் மொழி அபிமானிகளா அல்லது அபிமானிகள் என்று மொழி அளவில் நிற்கும் வேடதாரிகளா?

ஆசிரிய இலக்கணங் கூறிய பேராசிரியர்கள் காட்டியதென்னை. எத்தகையர் எத தன்மையர் எவ்வாறு கற்றுத் தேறியவர் ஆசிரியர் ஆகலாம் என்றிருக்கத் தொட்டதற்கெல்லாந் தொல்காப்பியத்தைப் பாதுகாப்பாரில்லையே, பழந்தமிழ் நூல்களை வணங்குவாரெங்கே, எம்மொழி இல்லாது ஒழியப் போகின்றதே என்று கூக்குரல் போடுபவர்கள் இந்தத் தெய்வமொழி பயின்று தேறிப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தில் அமைந்த அவமானத்தை நீக்க எப்போதாவது முயன்றார்களா? தராதரமற்ற ஆசிரியர்கள் என்று அடைமொழி கொடுத்துப் பண்டிதர்களையும் வித்துவான்களையும் அழைக்கின்ற ஒரு ஒழுங்கு ஆசிரிய வேதனத் திட்டத்தில் இடம் பெறுமேயானால் இந்த இழிமொழியை, இந்த வடுவை எடுத்துவிடாது நடமாடுந் தமிழனும் ஒரு தமிழனா? இவ்வாறே சிங்கள மொழியிலும் உண்டு. அதனைச் சிங்களமொழியபிமானிகள் சிந்திப்பார்கள் என்றே நம்புகின்றோம்.

எங்கள் நாடு மக்கள் ஆட்சியில் நிற்கும் மகத்தான நாடு என்று அகமகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி உலகறிய உவப்பாய் உரைக்கின்றோம். எங்கள் மொழிகளுக்கு இன்றே, இன்னே அதி உன்னத நிலை அளிக்க வேண்டுமென்று அரும்பாடுபடுகின்றோம். ஆனால் இந்தத் தெய்வ மொழியை, தொன்றுதொட்டுப் புகழ் கின்றிலங்கும் சிறந்த மொழியைக் காப்பாற்றி வளர்த்துவந்த பாவலர்கள் நாவலர்கள் பரம்பரையில் வந்து வித்துவான்களாகப் பண்டிதர்களாக உள்ள ஆசிரியர்கள் உண்ண உடுக்கத்தானும் உதவக்கூடிய ஆற்றலில்லாத வேதனத்தாலும் அதனோடு கூடிய அவமான வேதனையாலும் மனம் வாடி நிற்க இந்த ஆர்ப்பாட்டங்கள் ஏன்?

ஆரியதிராவிட மொழி விருத்திச் சங்கமும் சில அபிமானிகளும் ஆண்டுக்கொருமுறைகூடுவதுநிர்ணயங்கள் நிறைவேற்றிவிடுவதில் நின்றுவிடும். இந்த நிலைமை இனியேனும் மொழி அபிமானிகள் சற்றுச் சிந்திப்பார்களா? பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் என்று ஒரு வகுப்பை ஆக்கினார்கள், அதைப் பற்றி நாம் ஒன்றுங் கூறவரவில்லை, ஆனால் ஆரைப் பயிற்றி வைத்தல் பயன் தரக்கூடியது என்று பார்க்கவேண்டாமா. மொழியின் முழுத் தத்துவத்தை இலக்கணம் இலக்கியம் இதிகாசம் தர்க்கம் என்ற வகைகளில் நன்கு துருவி ஆராய்ந்து அறிவுபெற்றுப் பண்டிதப் பட்டம் பெறுகின்றவர்களைப் பயிற்றுவதா அல்லது சிரேட்ட தராதரப் பத்திரம் பெற்ற இளைஞர்களைப்பயிற்றுவதா ஆசிரிய உலகிற்கு ஏற்கும் என்று கேட்கின்றோம். பண்டிதர்கள் வகையிலுள்ளவர்களை எல்லாம் பயிற்றி விடுதல் ஆசிரிய முறைக்கு எத்துணை ஆதாரத்தை அளிக்கும் என்று அறிஞர்கள் அறியவில்லைப் போலும்.

இப்பொழுது வேதன விசாரணைக்கு முன் ஆரிய திராவிட மொழி விருத்திச் சங்கத்தார் பண்டிதர்களின் சார்பாகப்

திருத்தொண்டர் திருநாள்

# தூதுவிட்ட சுந்தரர்பாற் சீற்றங்கொண்ட அடியார்

## உயிர் நீத்து உண்மை அறிந்த ஏயர் கோன்

சோழநாட்டிலே திருப்பெருமங்கலத்திலே, வேளாளர் குலத்திலே ஏயர் குடியிலே கலிக்காம நாயனார் என்பவர் குருலிங்க சங்கம பத்தியிலே சிறந்தவராய்வாழ்ந்தார். அவர், சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார் தூதாக அனுப்பினாரென்பதை யறிந்து சுந்தரமூர்த்தி நாயனார்மீது பெருங்கோபங்கொண்டிருந்தார்.

இதையறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் சிவபிரானுக்கு விண்ணப்பஞ் செய்யச் சிவபெருமான் இவ்வெறுப்பை நீக்கி இவர்களை ஒன்றுகூட்டத் திருவுளங்கொண்டு ஏயர்கோன கலிக்காம நாயனாருக்குச் சூலைநோயுண்டாக்கி அது சுந்தரமூர்த்தி நாயனாராலேயே சுகமாகுமென்று அவருக்குத் திருவாய்மலர்ந்து பின் அச் சூலைநோயைத் தீர்க்கும்படி சுந்தரமூர்த்திநாயனாருக்கும் அருளிச்செய்தார். அவ்வாறு சூலைநோய் தீர்க்கும்பொருட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் செல்ல அதையறிந்த கலிக்காம நாயனார் தமது உடைவாளினாலே வயிற்றைக்கிழித்து இறந்தார்.

கலிக்காம நாயனார் இறந்த செய்தியைச் சொல்லாமல் அவருடைய சுற்றத்தவர்கள் வரவேற்கச் சுந்தரமூர்த்திநாயனார் அவருடைய வீட்டுக்குச் சென்றார். அங்கே கலிக்காமநாயனார் இறந்து கிடந்ததலைக்கண்டு தாமும் அவ்வாறு இறக்கத் துணிந்து உடைவாளைப்பற்றச், சிவபிரானது திருவருளாலே கலிக்காம நாயனார் உயிர்த்தெழுந்து சுந்தரமூர்த்திநாயனாருடைய கையில் வாளைப் பிடித்தார். சுந்தரமூர்த்தி நாயனார் வீழ்ந்து வணங்கினார். கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கினார். இந்த அதிசயத்தைக் கண்ட வானவர் பூமாரி பொழிந்தார்கள்.

'வன்றொண்டர் பின்னுங் கூற
மற்றவர் தம்மைக் காட்டத்,
'துன்றிய குருதி சோரத்
தொடர்குடர் சொரிந்துள்ளாவி,
பொன்றியே கிடந்தார் தம்மைக்
கண்டபின் "புகுந்த வாறு,
நன்(று)!" என மொழிந்து
"நானும் நண்ணுவேன் இவர்
முன்"பென்பார்."
'கோளுறு மனத்த ராகிக்
குற்றுடை வாளைப் பற்ற,
ஆளுடைத் தம்பி ரானா
ரருளினால் கவரும் உய்ந்து,
"கேளிரே யாகிக் கெட்டேன்"
எனவிரைந் தெழுந்து கையில்,
வாளினைப் பிடித்துக் கொள்ள
வன்றொண்டர் வணங்கி
வீழ்ந்தார்.'
"மற்றவர் வணங்கி வீழ
வாளினை மாற்றி ஏயர்
கொற்றவ னாரும் நம்பி
குரைகழல் பணிந்து வீழ்ந்தார்;
அற்றைநாள் நிகழ்ந்த இந்த
அதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி
பொழிந்தனர் புவனம் போற்ற."

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சைகள் — 1952.

பிரவேச; பாலபண்டித, பண்டித பரீட்சைகள் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 25ந் திகதி வியாழக்கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்னும் இரு இடங்களில் நடைபெறும்.

விண்ணப்பம் அனுப்புங் காலம் ஜூலை (July) மாதம் 31-ந் திகதியோடு முடிவாகும். பிந்தின விண்ணப்பங்கள் அவ்வப் பரீட்சைகளுக்குரிய கட்டணப் பணத்தில் அரைப்பங்கு மேலதிகமாகச் சேர்த்தனுப்பப்பட்டால், ஓகஸ்டு மாதம் 15ந் திகதி வரைக்கும் ஏற்கப்படும்.

பிரவேச தமிழ்ப்பரீட்சைக்குத்தோற்றுபவர்கள்இலங்கை வித்தியாபகுதியால் நடாத்தப்படும் சிரேஷ்ட பாடசாலைத்தராதரப் பத்திரப் பரீட்சைகளில் (S. S. C. Tamil or English) சித்தியடைந்தவர்களாயிருந்தால், IV-ம் பாடவகையிலுள்ள பாடங்களுக்குத் தோற்ற வேண்டியதில்லை. முதல் மூன்றுபாடவகைகளிற் (இலக்கியம், இலக்கணம், கட்டுரை) சித்தியடைந்தால் தராதரப்பத்திரம் வழங்கப்படும. என ஷெ. சங்கக் காரியதரிசியாகிய திரு. அ. சரவணமுத்து தெரிவிக்கின்றார்.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

பேச்சுப் பிரவாகம்

இந்திய அரசியற்சபை ஒன்றிற் பேச்சாளர்கள் அளவு கடந்து பேசாதுநிற்க எச்சரிக்கை உபகரணம் ஒன்றை நிறுவியிருக்கின்றார் தலைவர். ஒரு சிவப்பு ஒளி பேச்சுக்குரிய காலம் முடிவடைய வேண்டியநேரத்துக்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்னே பேச்சாளரின் முன் எறிக்கும். அபாயக்குறியல்லவா சிவப்பு. ........ உடனே எதுவிதத்திலும் பேச்சாளர் கவனம் இழுக்கப்படும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பேச்சாளர் மனந் தடுமாறிப் பேச்சுப் பேசாதுவிடவேண்டியநிலைமை ஏற்படத்தான் வேண்டும்.

O O O

வரம்பு கடந்த பாய்ச்சல்!

பாராளுமன்றத்தில் அல்லது வேறு அரசியற் சபைகளில் ஒருவாறு நேரம் கவனிக்கப் படவேண்டியேயிருக்கும். ஆனாற் பொதுக் கூட்டங்கள் இருக்கின்றனவே அங்கே குழுமியிருக்கும் நண்பர்கள் பேச்சாளர்களாற்பெரிதும் உபத்திரவப்படுத்தப் படுவதுதான் பரிதாபநிலை. பொதுவாக ஒரு சிறந்த பேச்சாளரைக் கேட்கவே பொதுசனங் கூட்டத்திற்குப் போவது வழக்கம், இக் காலச் சம்பிரதாயப்படி பேச்சாளர் தொகை ஒரு பிரத்தியேக அநுகூலம் என்ற கொள்கையினாற் பலரும் பேச்சுநிகழ்த்துவார்கள். நிகழ்த்தினாற்றானென்ன! நிகழ்த்திப் போகலாம் என்றால் இடங்கிடைத்தவர்கள் இலேசாகவிட்டு விடுவார்களா?

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# யாழ்ப்பாணப் புகையிரத நிலையத் திருத்தம்

## போக்கு வரத்து மந்திரிக்கு வேண்டுகோள்

திரு. சாம். சபாபதி அவர்கள் தலைமையில்நடந்த சென்ற யாழ்ப்பாண நகரசபைக் கூட்டத்திற், பிரயாணிகள் மேடை இரண்டுடன் தற்கால வசதிகளமையுந் திருத்தங்கள் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற் செய்யப்பெறுதல் வேண்டுமென்னும் பிரேரணை திரு. R. C. மன்மதராயன் பிரேரிக்க திரு. P. காசிப்பிள்ளை அநுவதிக்க ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பெற்றது.

1947-ம் ஆண்டிலும் இத்தகைய ஒரு பிரேரணை பிரேரித்து அனுப்பப்பெற்றதென்றும், அக்காலத்தில் உருக்கு முதலிய பொருட்கள் கிடையாமையால் வேண்டியன செய்ய முடியவில்லையென்றும் பல ஏதுக்களால், கொழும்புக்கு அடுத்தபடியில் இந்நிலையம் இருக்கிறதென்றும், புகையிரதப் பகுதியுள் வடபகுதியே மிகுந்த வருமானத்தைத் தருவதென்றும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின்விலை பிரயாணிகளின் தொகை மிக அதிகமென்றும பெண் பிரயாணிகளின் தொகையும் அவர்களுக்குண்டாகும் வசதியீனங்கள மிக அதிகமென்றும் எடுத்துக் காட்டி இக் காரணங்களாலே குறித்த பிரேரணையில் வேண்டப்படும் திருத்தங்கள் அத்தியாவசியகமானவை என்று திரு. மன்மதராயன் வற்புறுத்தினார்.

போக்கு வரத்து மந்திரி அவர்கள் இவ் விஷயத்திற்கு முதன்மையான இடங்கொடுப்பாரெனத் தாம் நம்புவதாகவுங் கூறினார்.

பேசுகின்றார்கள். இப் பேச்சுகள் வழமைபோலக் [illegible] படாது நன்மைபயக்கும் என்று எண்ணுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைவானில்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### 'இன்னும் ஒரு குறிப்புடன்'

'இன்னும் ஒரு குறிப்புடன் என் சிற்றுரை கின்றுவிடும்' என்ற பல்லவியை ஒவ்வொரு பேச்சாளரும் பாடுவார். சிற்றுரை ஒரு தொற்றுரையாகி வந்தாலும் காரியமில்லை வெற்றுரையாகின்றதே, என்றால் எனசெயலாம். பொது சனம் வகைமோசமாய் அகப்பட்டு விட்டார். அவர்மாத்திரமா - மற்றைய பேச்சாளர்கள், தலைவர் கூட்டஅலுவலாளர்கள் எல்லாருக்கும் ஒரே பரப்பரப்பு. கைக் கடிகாரத்தைப் பார்ப்பார் ஒருவர்! எனை ஒன்பது மணியிருக்குமா என்று உரத்துச் சொல்லுவர் இன்னொருவர். இப்படியாக நின்றும் பேச்சாளர் மூச்சு வீச்சாகிக் கொண்டேயிருக்கும். ஆனாற் பின்னரும் ஒரு முறை "இன்னும் ஒரு குறிப்புடன்" என்று சொல்லிக்கொண்டு மறுபடி ஒரு நாழிகை.

## பண வசதி!

யாழ்ப்பாணப்பட்டினத்தி லுள்ள காணிக்கு ஈட்டுக்கு காசு கொடுக்கப்படும்.

விபரம் :
**D. இராசதுரை**
பிறக்றர் & நொத்தாரிஸ்,
10 — 1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்

### அதிர் வெடி மருந்து!

இந்த நெருக்கடிக்கு மருந்து இல்லையா? அங்கே சிவப்பு ஒளி காட்டி கிற்பாட்டுகின்றார்கள் என்றால் இங்கே.... மேடைக்கருகிற் பேச்சு முடிய வேண்டிய எல்லைக்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னர் ஒரு அதிர்வேட்டுப் போட்டாற் பேச்சாளர் ஒதுங்கிவிடுவர் கண் தூங்கினவர்களும் எழுந்து விடுவார்கள்! எங்கும் உசாராக இருக்குமல்லவா? |

# நகரசபைத் தலைவரின் நன்மொழி

## உணவுவிற்பனையாளர்கள் உணர வேண்டியன

அன்புள்ள பெரியோர்களே,

20-7-52 ஞாயிற்றுக்கிழமை முதல் 26-7-52 சனிக்கிழமை முடிய அகில இலங்கைச் சுகாதார வாரம் நடைபெறுகின்றது. இவ்வாரத்தில் சுகத்திற்கு ஆதாரமான விஷயங்களைச்செய்யவேண்டும். அதற்காக நகர மக்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் அன்புடன்வேண்டுகின்றேன்.

நகரத்தின் நன்மை கருதி நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள்பலஉள. ஆனால், உணவு வகைகளைத் தயாரித்து விற்பவர்களைப்பற்றிய விஷயம் ஓர் முக்கிய பிரச்னையாக என் மனத்தில் - இன்றுநேற்றல்ல- நான் நாட்டின் சேவையில் ஈடுபட்ட நாள்முதல் தோன்றியிருக்கின்றது. ஆதலால் உணவைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய சில முக்கியமான குறிப்புகளை இன்று உங்களுக்குக்கூறவிரும்புகிறேன். உணவு என்றதும், உணவு உற்பத்தி, உணவு பெறும்வழிகள், உணவைப் பங்கீடுசெய்தல் ஆகிய வற்றைப்பற்றி இக்காலத்தில் சிந்திப்பீர்கள் உணவுக்குரியன, சமையல்செய்யப்பட்டனவாயும், சமையல செய்யப்பெறுதனவாயும் எமக்குக் கிடைக்கின்றன. சமையல் செய்யப்பெற்ற உணவைப்பற்றித்தான் இங்கு கவனிப்போம்.

சமசத்துடைய உணவே தேச மக்களுக்கு வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக்கொள்வர். ஆனால் இச் 'சமசத்துணவை'ச் சுகாதார விதிகளுக்கும் சட்டங்களுக்கும் உண்மையான அமைவோடு தயாரித்து உண்பவர் உள்ளம் வசீகரமடையத்தக்க புனிதமான முறையில் வழங்குதல் வேண்டுமென்று வாதிப்போர் மிகச் சிலரே.

மனதைக் கவரும் தூய சூழலிற்றான் உண்பவனுக்கு உணவில் விருப்பம் வளரும்; உண்ணும் சமசத்துணவு உடலில் ஊறிக்கொள்ளும்; உணவினால் விளையும் சக்தி வளரும். ஆதலால் நீங்களே இதற்குப் பெரிய் பொறுப்பாளிகளாயிருக்கிறீர்கள்.

இவ் வியாபாரத்தில் பல ஆண்டுகளாக அனுபவமுள்ள நீங்கள் அதற்குரிய சட்டதிட்டங்களை நன்கு அறிவீர்கள். (அவை கட்டுப்பாட்டிற்குரியன.) நகர சபையின் பரிசோதகர்கள் தினம் தினம் உங்கள் கடைகளைத் தரிசிக்கலாம். சட்டத்திற்கமைய உங்கள் வியாபாரம்நடக்கின்றதோ எனப் பார்க்கலாம். ஆனால் எந்நேரமும் உங்களைக் கவனிக்கமுடியுமா?— ஆதலால் வியாபார விதிகளைச் சுகார முறைகளுடன் கைக்கொள்வது உங்கள சொந்தப் பொறுப்பு.

சுகாதாரப் பரிசோதகர் உங்களிடம் வருவது உங்களுக்குத் தொந்தரவு கொடுப்பதற்கல்ல, சுகாதார விதிகளை அனுஷ்டிக்க உதவி செய்வதற்கென்றே நீங்கள் உணரவேண்டும். அவர்கள் அன்பாய்ச் சொல்வதைக் கேட்டு ஒத்துழையுங்கள். சில பிரமாணங்களுக்கமைய நடக்கின்றார்களில்லை. உரிய காலத்தில் "லைசென்ஸ்" பெறுகின்றார்களில்லை என்னும் குறைகளுக்கிடமின்றி உங்களை நீங்களே உயர்த்திக்கொள்வது நன்று. உணவு விற்பனை நிலையங்களின் சொந்தக்காரர் காலம் கடத்தாமல் உங்கள் ஆதரவாளர்கள் ஐயப்படாமல் அருவருப்பின்றி மனோரம்மியத்துடன் தினமும் வந்து ஆதரிக்கத் தகுந்த முறையில் தங்கள் ஸ்தாபனங்களைத் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

உண்ணும் உணவை உதாசினமாய் விற்பதால் உண்டாகும் நோய்கள், நெருப்புக் காய்ச்சல்,வயிற்றுளைவு, வயிற்றோட்டம், கசம், சிறுபிள்ளைவாதம்(Poliomyelitis) வாந்திபேதி, கிருமிகளினால் உணவில் நச்சுத்தோஷம் உண்டாதல் ஆகியன என்பதை நீங்கள் அறியவேண்டும்.

நம் சகோதரர்களாகிய மற்றவர்களின்மேல் அனுதாபமின்றி உணவுப்பொருட்களை உதாசினமாய் விற்பனை செய்யும் நிலையங்கள் மூலமே இந்நோய்கள் பரப்பப்படுகின்றன. கசரோகம், நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு ஆகிய இந்நோய்கள் இந்நகரத்தில் நிலைத்துவிட்டன என்பதை எல்லாரும் அறிவீர்கள். கசரோகம் இந்நகரின் மக்களுடைய சுகத்திற்கு முதல் எதிரிஎனக் கருதப்படுகின்றது. வாலிப மக்களை நெருப்புக் காய்ச்சல் அதிகமாய்ப் பிடிக்கின்றது. நாட்டின் வாலிபர் அநேகர் இந்நோய்க்குப் பலியாகின்றனர்.

சிறுபிள்ளை வாதம் மிகவும் அபாயகரமானதொற்றுநோய். அதுவும் இலங்கையில் நிலைக்கப்பார்க்கின்றது.

எங்கள் உழைப்பைத் தஞ்சமெனக் காத்திருக்கும் வறியவரைப்போல், வயிற்றுளைவும், வயிற்றோட்டமுமாகிய கொடிய நோய்கள் என்றும் எங்கள் கவனயீனத்தைக் காத்திருக்கின்றன. ஆகையால் விழிப்பாயிருங்கள்.

இந்நோய்களால் ஏற்படும் கஷ்டங்கள் அளவற்றன ஆதலால் எங்கள் நகரத்திலிருந்து இவ்வியாதிகளை அழித்துவிட வேண்டும் என்ற அபிமானங்கொண்டு சுகாதாரப்பகுதியாருடன் எல்லாரும் ஒத்துழையுங்கள்.

நான் கூறிய வியாதிகள் பரவுதற்குத் துணையாகவுள்ள காரணங்கள் எவை என்பதை அறிய நீங்கள் விரும்புவீர்கள்.

இதைப்பற்றி நான் காலத்திற்குக் காலம் பெற்ற முறைப்பாடுகளை உங்களிடம் சமர்ப்பிப்பதே அல்லாமல் உங்களுக்கு அறியச் செய்யும் வழி வேறு இல்லை.

A. உணவு விற்பனையாளரால் பாவிக்கப்படும் தளபாடங்களும், பாத்திர வகைகளும் அழுக்குடையவை.

B. பாவித்த பாத்திரங்கள் எப்பொழுதும் ஒரே வாளித் தண்ணீரில் அமிழ்த்தப்படுகின்றனவேயொழியச் சுத்தஞ் செய்யப்படுவதில்லை. வாளித் தண்ணீரும் அதிகமாய் மாற்றப்படுவதில்லை.

C. திருப்தியற்ற முறையிலே கழுவப்பட்ட பாத்திரங்கள் அழுக்குள்ள கந்தைத் துணிகளால் துடைக்கப்படுகின்றன. இதே கந்தைத்துணி தளபாடங்களில உள்ள தூசுகளைத் துடைப்பதற்கும் பாவிக்கப்படுகின்றது.

D. மேசைகள் அழுக்குள்ளனவாயும், எண்ணெய்ப் பற்றுள்ளனவாயும் இருக்கின்றன.

E. குடி தண்ணீர் கொதிக்க வைத்து ஆறவிடப் பட்டுத் தக்க பாத்திரங்களில் வைக்கப்படுவதில்லை.

— (வரும்)

# என்னிலும் இனியான்

( முதற் பக்கத் தொடர்ச்சி )

டும். போலி ஆடம்பரம் பயன்றருவது முயற்கொம்புதான்,

திருச்சிற்றம்பலம்.

கனியி னுங்கட்டி
பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற்
பாவைநல் லாரினும்
தனிமுடி கவித்
தாளுமர சினும்
இனியன் தன்னடைந்
தார்க்கிடை மருதனே.
திருச்சிற்றம்பலம்.

இப்படியே வெட்டவெளியாகச் சிவபிரானின் இனிமை பேசப்படச் சைவமாஞ் சமயஞ்சார்ந்தோர் வஞ்சனை உலோபம் பொறாமை என்ற நச்சுச் செடிகளால் இதய வயலைப் பாழ்படுத்துவது உய்த்துணராக் குறையேயாம். பாலிய வாலிபப் பகுதியுள் அடங்கும் மக்கள் சிவபிரானை இனிமை யுடையவர் என்றுணர்ந்து வழுத்தி இன்புறவேண்டும் என்பதே சீரிய சிவதொண்டர்களின் கருத்து. தமக்கு மேலானவரும், ஒப்பானவரும் இல்லாத இன்ப வுருவுடைய,சிவனெனும் நாமந் தமக்கே உடைய ஒருபெரு முதல்வரை முக்கரண சுத்தியுடன் எக்காலமும் போற்றிப் பிறவிப் பெருங் கடல் நீந்துமின்னுவீர்களாக.

தனக்குவமையில்லாதான்
தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.

இனித் தோற்றமானது பஞ்சபூதங்கள் மனம் விஞ்ஞானம ஆநந்தம் என்று படிப்படியாய் உயர்ந்துசெல்லும். இப்போது மனிதன்கிற்பது நாலாவது படியாகிய விஞ்ஞானத்திலேதான். மேனாட்டு விஞ்ஞானமும் உபநிஷத விஞ்ஞானமும் வேறு வேறானவை.

### ஆராய்ந்து அறிய வேண்டியது

இருதய குகையிலுள்ள பிரமதத்துவம் இது என மனிதனே ஆராய்ந்துணரவல்லவன், ஒரு கோயிலே இதற்கு உதாரணமாக விவேகிகள் காண்கின்றனர். கர்ப்பக் கிரகத்திலுள்ள மூல விக்கிரகம் பரம கருணாநிதியான சிவம். ஐந்துவகைக் கோசங்கள் ஐந்து பிராகாரங்களாகும். அன்னமய கோசமே பிரமஞ்ஞானம் பெற வழியாக இருக்கின்றது.

பரமாத்துமாவாகிய சிவபிரான் ஆகாயம்,வாயு, அக்கினி முதலியவைகளைச் சிருட்டித்து, ஒவ்வொன்றினுள்ளும் விசேட சக்தியாய் நின்று இயக்குவது போல, தப்பரம்பொருள் உயிரிடம் அந்தக்கரணமாகிய குகையுள் தங்கிப் பார்ப்பவராகவும் கேட்பவராகவும் நினைப்பவராகவும் எல்லாவற்றிற்கும் சாட்சியாக விளங்குகின்றார். இனியது எது எளபதுஉணரார்க்கு அதோகதி என்று கூறவேண்டும். கட்டி மணைத்திடு மனைவி மைந்தர்கள தேகமாகிய நடைவீடு காசமுறும்போது துணையாவரா? ஆகமாட்டார். ஆகவே, உலகம் அனுபவப்பொருள். பொருள் பெற்று உண்டு களித்து இன்மொழி வழங்கினோர் ஆகிய எதனையும் எவரையும் இனியன என்று கருத வேண்டாம். ஆன்மா இனியது. அழியாதது. பரமாத்மா சகல அறிவும் சுதந்திரமும் அழியாத் தன்மையுமுடையது. அதனையே என்னிலும் இனியான் ஒருவன் உளன் என்று முடிவான அறிக்கையை அருட் செல்வர்கள் அளித்துப் போயினர். கற்றதுங் கேட்டது மேதுக்காகக் கடபடவென் றுருட்டுதற்கோ? அன்று இன்பவுருவை எய்தித் தானும் இன்புறுவதற்கேயாம். சாத்திர வாதம் சமய வாதம் வாணாள் வீணாளாக்க ஏற்ற வழிகள். இவறறைக் கடைப்பிடியாது, இனிய இறைவனைத் திரிகரணங்களாலும் தூய முறையில் வழிபாடு செய்து உய்திபெறுவீர்களாக.

நித்தியமாய் நின்மலமாய்
நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச்
சமீபமுமாய்த் தரியநிறைச்
சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமாய்
ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச்
சுகாரம்ப பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

சுபம்.

## நல்லூர்க் கிராமச் சங்கம்

1952 ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-30மணிவரை யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர்க் கிராமச்சங்கத் தலைவரால்

(1) திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை ரோட்டுத் திருத்தம்.மதிப்பு. ரூபா 10,000/=

(2) கருணாநிதி ரோட்டையும், பலாலி ரோட்டையுந் தொடக்கும்ரோட்டு அமைத்தல் — மதிப்பு — ரூபா, 10,000/=

ஆகிய வேலைகளுக்குச் "சீல்" இட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள், கிராமச்சங்கக் காரியாலயத்தில அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும்; அல்லது பதிவுசெய்யப்பட்ட கடித மூலம் கிராமச்சங்க அக்கிராசனருக்கு அனுப்பப்பட வேண்டும்; அல்லது 19 - 7 - 52 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச்சங்கக் கூட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும்,

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 10/= கட்டுக்காசு கட்டியதன் பேரில், கிராமச்சங்க அக்கிராசனரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட வேண்டும்.

மேலதிகமான விபரங்களைதுவும் நல்லூர்க் கிராமச்சங்க அக்கிராசனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
K. S. Chelliah
அக்கிராசனர்
நல்லூர்க் கிராமச்சங்கம்

* 11-7-52-ல் வெளிவந்த இதழில் Dr. S. Chelliah என வெளிவந்ததை K. S. Chelliah என வாசிக்கவும்.
M. 74 11, 15—7—52.

## தூதுவிட்ட சுந்தரர்பாற் சீற்றங்கொண்ட அடியார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதனபின் இருவரும் இடைவிடா நட்புடையாராகித் திருப்புன்கூருக்குப் போய்ச் சுவாமியைத் தரிசித்துத் திருவாரூரையடைந்தார்கள். அங்கேசுவாமி தரிசனஞ்செய்து சுந்தரமூர்த்தி நாயனாருடைய அநுமதி பெற்றுக் கலிக்காமநாயனார் தமது ஊருக்குத் திரும்பித் திருத்தொண்டு செய்து வாழ்ந்து சிவபதமடைந்தார்.

"அங்கினி தமர்ந்து நம்பி
அருளினால் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க
தம்பதி புகுந்து பொற்பில்
தங்குநாள் வயர் கோனார்
தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதஞ்
சேர்ந்தனர் சிறப்பி னோடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதச் செம்பொருள் விளக்கம்

## ஒன்பதாஞ் சூத்திரத் தெளிவு

(முற்றொடர்ச்சி)

**சிவோகம் பாவனையில் முற்றிய உயிர் சிவத்தின் ஞான சொரூபத்தைக்காணும்**

சிவோகம் பாவனையில் உறைத்து நிற்கும் உயிர்முன் பாசப் பொருள்கள் விரைந்து மறையுமென்றோம். என்றால் அவ்வுயிர் முன் அப் பாவனையின் போது விளங்கித் தோன்றுவது எது என்பதை ஆராய்வாம். படிகத்திற் கென்று ஓர் சொரூபமிருப்பினும் அதனை அடுத்து நிற்கும் பொருள்களின் நிறங்கள் அச் சொரூபத்தினை விளங்கவொட்டாது மறைக்கும் என்பதை அறிவோம். ஆனால் அவ் வேற்று நிறங்களைப் படிகத்தின் நிறமல்லவென்று கண்டு அவ்வேற்று நிறப் பொருளகளை அகற்றிய ஒருவனுக்கு விளங்கித் தோன்றுவது அப் படிகச் சொரூபமே. அதுபோல, உயிரறிவின் கண் வியாபித்துள்ள சிவசொரூபம் உயிர்க்கு விளங்கவொட்டாது மறைத்து நிற்பன அவ்வுயிரை அடுத்து நிற்கும் பாசப் பொருள்களின் இயல்புகளே. இப் பாசப்பொருள்கள் சிவோகம் பாவனையால் உயிர்க்கு விளங்கித் தோன்றாது மறைய; அப்பாவனையின்போது அதனறிவில் விளங்கித் தோன்றுவது சிவத்தின் ஞான சொரூபமே. அதாவது சிவத்தின் அருள் வடிவே. இவ் வடிவம் விளங்குப்வரை உயிர் பாசப்பொருள்களால் வரும் துயர வெப்பத்திலழுந்திக் கிடக்கும். அவ்வுயிர்க்குச் சிவோகம பாவனையின்போது இந்த ஞானவடிவமே தண்ணிழல்போல உதவிப் பாசப் பொருள்களால் வருந் துயரத்தை மாற்றும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'தண்ணிழலாம் பதி' என்று உணர்த்தும், ஈண்டுப் 'பதி' என்றது பதியின் ஞானசொரூபத்தை உணர்த்தும்.

**சிவத்தின் ஞான சொரூபத்தைக் கண்ட உயிர், அக்காட்சியில் உறைத்து நிற்றற்கு முத்திபஞ்சாக்கரத்தை உச்சரிக்கவேண்டும்**

சிவோகம் பாவனையிலுறைத்து நிற்கும் உயிர்க்குச் சிவஞான உருவம் விளங்கித் தோன்றுமென்றோம். என்றால், அச்சொரூபக் காட்சியில் உயிர் பிறழாதிருத்தலும் வேண்டும். அவ்வுயிர் சிவோகம்பாவனையிற் சிறிது குன்றுமேல், மீளவும் அதற்கு ஆணவ மறைப்பு மேற்பட்டு, பாசப் பொருள் விளங்கிச் சிவஞான உருவமும் விளங்காது மறையும். இவ்வாறன்றி அவ்வுருவக் காட்சியில் உயிர் நிலைநிற்றற்கு யாது உபாயம் என்பதை ஆராய்வாம். ஓர் நூலை நாம் படிக்கும்போது அந்நூலிலுள்ள செய்திகளில் நம் சிந்தனையை நிறுத்த விரும்புகிறோம். நம் சிந்தனையோ எதனிலும் இடையீடின்றி நிற்றலில்லை. ஒரே வேளை திடீரென மாறுவதுமுண்டு. அவ்வாறு மாறவொட்டாது தடுப்பதற்கான சில உபாயங்களையுஞ் செய்கிறோம். அவ் வுபாயங்களிற் சிறந்தது படிக்குஞ் செய்திகளைச் சரிவர உணர்த்துஞ் சொல்லைத் தன் மனத்தினுள்ளே சொல்லுதல். அதாவது எந்தச்செய்தி நம் சிந்தனையில் நிலைபெறவேண்டுமோ அந்தச் செய்தியைச் சரிவர உணர்த்துஞ் சொல்லை நம் மனத்தினுள்ளே சொல்லுதலாம். சிவோகம் பாவனை செய்யும் உயிரும், அப்பாவனையிலும் அதன்கண் விளங்கும் சிவஞானக் காட்சியிலும் நிலைநிற்றற்கு இவ்வுபாயத்தைப் போன்றதோர் உபாயத்தைச் செய்துகொள்வது அவசியம். அதாவது உயிர்க்குப் பாசப் பொருள்கள் விளங்காது மறைந்தொதுங்க, அவ்வுயிர் சிவஞானக்காட்சியைப் பெறும் என்னும் உண்மையை விளக்குஞ் சொல்லைத் தன்னறிவினுள்ளே கணித்தல் வேண்டும். இச்சொல் 'முத்தி ஐந்தெழுத்து' எனப்படும். இம்மந்திரத்தின் உருவத்தையும் பொருளையும் அநுபவத்தில் உணர்ந்துள்ளார் சிவோகம் பாவனையில் மிகப் பழகிச் சிவஞானக் காட்சியில் அழுந்தி நிற்கும் ஞானாசாரியரே. இத்தகைய ஆசிரியரிடத்தே அம் மந்திரத்தை முறைப்படி கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இக் கருத்துக்களையெல்லாம் உணர்த்தவே, இச் சூத்திரம் 'விதி யெணுமஞ்செழுத்தே' என்றோதியது. ஈண்டுள்ள 'விதி' என்பதற்கு விதிப்படி என்பது பொருள். அதாவது எந்த வரிசையில் இம்மந்திரத்திலுள்ள ஐந்து எழுத்துக்களும் தொடுக்கப்பட்டால் அம்மந்திரம் மேலே விளக்கப்பட்ட பொருளைத் தருமோ அந்த வரிசையில் என்பது பொருள். 'எண்ணும்' என்னுஞ் சொற்கு 'எண்ணுக' அதாவது அறிவினுள்ளே உச்சரிக்க என்பது பொருள்.

உண்மை பேசு
உயர்வு அடைவாய்


## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லிபாரதம் - புட்பயாத்திரைச்சருக்கம்: பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளைஎழுதிய நுண்பொருள்விளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறுமுதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S.S.C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம்பதிப்பு) விலை ரூ.1-25ச.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷைபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.)அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)


புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, anaJff



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும். நீரழிவு, பவுத்திரம், மூலம், குனமம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)

M. 16. 25-4-52—25-10-52.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



| திறமான | திறமான |
| --- | --- |
| தேக்க மரங்கள் | ருணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday, July 15. 1952,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org